10.05.2016

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நெல்லை மாவட்டத்தில் கோடை மழை: வெப்பம் தணிந்தது!**



**திருநெல்வேலி:** திருநெல்வேலி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை பல்வேறு பகுதியில் இடியுடன் கோடை மழை பெய்ததால் வெப்பம் தணிந்து காணப்பட்டது.

கோடை காலம் தொடங்கிய நிலையில் கடந்த 40 தினங்களாக கடும் வெப்பம் நிலவி வருகிறது. பகல் 12 மணிக்கு மேல் பிற்பகல் 3 மணி வரை வெப்ப சலனத்துடன் கடும் வெப்பம் இருப்பதால் பொதுமக்கள் வெளியே செல்ல முடியாமல் வீடுகளில் முடங்கும் நிலை காணப்படுகிறது.

வாகனங்களில் செல்வோர் பெரிதும் பாதிப்புக்கு ஆளாகினர். சாலையோர நடைபாதை வியாபாரிகள் வெப்பத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டனர். குளிர் பானங்கள், இளநீர் விற்பனை

அதிகரித்துள்ளது. வெப்பத்தை தணிக்க அருவிகள், நீர் நிலைகளை தேடி செல்லும் நிலை உள்ளது.

இதனிடையே 2 தினங்களாக மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் மிதமான மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் இன்று திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை, சந்திப்பு, நகரம், மேலப்பாளையம், சுத்தமல்லி, பேட்டை, கோபாலசமுத்திரம், மேலச்செவல் உள்பட மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இடியுடன் கோடை மழை பெய்தது. இதனால் வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது.

செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி கருப்பாநதி அணையில் 2 மி.மீ, அடவிநயினார் அணையில் 6 மி.மீ, ராதாபுரத்தில் 8 மி.மீ மழை பதிவாகியிருந்தது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 175.81 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 29 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

**நாள்தோறும் 3 அடி குறைகிறது:** பாபநாசம் அணை 66.65 அடி, சேர்வலாறு அணை 74.80 அடி, மணிமுத்தாறு அணை 81.10 அடி, கடனாநதி அணை 27.60 அடி, ராமநதி அணை 25 அடி, கருப்பாநதி அணை 24.94 அடி, வடக்குப்பச்சையாறு அணை 24.70 அடி, அடவிநயினார் அணை 45 அடி, குண்டாறு அணை 11.80 அடி, நம்பியாறு அணை 13.05 அடி, கொடுமுடியாறு அணை 2.50 அடியாகவும் இருந்தது.

பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளில் இருந்து விநாடிக்கு 1000 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுவதால் மேற்கண்ட அணைகளில் இருந்து தினமும் 3 அடி நீர்மட்டம் குறைந்து வருகிறது.

## பருப்பு விலை ரூ.120-க்கு மேல் உயராது

பருப்பு வகைகளின் விலை கிலோவுக்கு ரூ.120-க்கு மிகாமல் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் தெரிவித்தார்.

இதுகுறித்து பிகார் தலைநகர் பாட்னாவில், செய்தியாளர்களிடம் அவர் திங்கள்கிழமை கூறியதாவது:

பருப்பு வகைகளை தேவைப்படும் அளவு இருப்பு வைப்பதன் மூலம், அதன் விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடியும். நாட்டின் பருப்புத் தேவை ஆண்டொன்றுக்கு 2.35 கோடி டன்னாக உள்ளது. அதேவேளையில் அதை ஈடுகட்டும் வகையில் உற்பத்தி இல்லை. நிகழாண்டில் பருப்பு உற்பத்தி 1.7 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நுகர்வோர்களின் தேவைக்கேற்ப பருப்பு வகைகளை இருப்பு வைப்பதற்காக உள்நாட்டுச் சந்தையிலிருந்து 50 லட்சம் டன் பருப்பு கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இதைத்தவிர, 26 லட்சம் டன் பருப்பு இறக்குமதி செய்யப்படவுள்ளது. இதில், ஏற்கெனவே 10 லட்சம் டன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பருப்பு வகைகளின் விலை கிலோவுக்கு ரூ.120-க்குள் இருப்பதை உறுதிசெய்ய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றார் ராம்விலாஸ் பாஸ்வான்.

## வேளாண் விளைபொருள்களைச் சேமிக்க பாராதீப்பில் அதிநவீன குளிர்பதனக் கிடங்கு: பெட்ரோலிய அமைச்சர் பிரதான் தகவல்

ஒடிஸா மாநிலம், பாராதீப்பில் வேளாண் விளைபொருள்களைப் பாதுகாப்பாக சேமிக்க மத்திய அரசு சார்பில் அதிநவீன குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும் என்று மத்திய பெட்ரோலிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

கட்டக் தேசிய அரிசி ஆராய்ச்சி நிலையத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றுப் பேசும்போது மேற்கண்ட தகவலை வெளியிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

குளிர்பதனக் கிடங்கு வசதி இல்லாமல் இருப்பது ஒடிஸா விவசாயிகளுக்கு பெரும் பிரச்னையாக இருக்கிறது. ஒடிஸா விவசாயிகள் பல்வேறு வகையான வேளாண் விளைபொருள்களை விளைவிக்கின்றனர். எனினும், எளிதில் அழுகும் பொருள்களைப் பாதுகாப்பாக சேமிக்க மாநிலத்தில் போதிய எண்ணிக்கையில் குளிர்பதனக் கிடங்குகள் இல்லை. மாநிலத்தில் மொத்தமுள்ள 108

குளிர்சாதனக் கிடங்குகளில் 27 மட்டுமே செயல்படுகின்றன. அவற்றில் 5 மட்டுமே அரசுக்குச் சொந்தமானவை.

கிடங்குகள் அமைப்பது தொடர்பாக ஒடிஸா அரசு திட்டங்களைத் தயாரித்து அனுப்பினால் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சகத்துடன் பேசி பணியை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நிலையில் பாராதீப்பில் மாபெரும் குளிர்பதனக் கிடங்கைக் கட்டுவதற்கு பெட்ரோலிய அமைச்சகம் திட்டமிட்டிருக்கிறது. விவசாய விளைபொருள்களைப் பாதுகாப்பாக சேகரித்து ஏற்றுமதி செய்ய இந்தக் கிடங்கு உதவும்.

இந்தியாவில் இருந்து நல்ல தரமான உயர் ரக அரிசியை இறக்குமதி செய்ய அரபு நாடுகள் விரும்புகின்றன. அவர்களின் தேவையை நிறைவேற்றும் வகையில் நல்ல தரமான அரிசியை தேசிய அரிசி ஆராய்ச்சி நிலைய அறிவியலாளர்கள் உருவாக்க வேண்டும் என்று தர்மேந்திர பிரதான் கேட்டுக்கொண்டார்.

## விளைச்சல் குறைவு: மிளகாய், தக்காளி விலை உயர்வு

நெல்லை, விருதுநகர் மாவட்டங்களில் விளைச்சல் குறைந்துள்ளதால் மிளகாய் வத்தல் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

ராஜபாளையம் பகுதியில் கடந்த வாரம் குவிண்டால் ரூ.16ஆயிரத்திற்கு விற்பனையான முதல் தர குண்டு மிளகாய் ரூ. 500 விலை உயர்ந்து ரூ.16 ஆயிரத்து 500க்கு விற்பனையானது. குவிண்டால் ரூ.13 ஆயிரத்து 500 க்கு விற்பனையான இரண்டாம் தர மிளகாய் வத்தல் ரூ. 500 விலை உயர்ந்து குவிண்டால் ரூ.14 ஆயிரத்திற்கு விற்பனையானது.

இதுபோல் பச்சை மிளகாய் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது.

கடந்த மாதம் கிலோ ரூ.60க்கு விற்ற பச்சை மிளகாய் படிப்படியாக விலை அதிகரித்து தற்போது கிலோ ரூ.100க்கு விற்பனையாகிறது.

தக்காளி: கடந்த மாதம் கிலோ ரூ.10க்கு விற்ற தக்காளி தற்போது கிலோ ரூ.60ஆக விலை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு பெய்த தொடர் மழையால் தோட்டங்கள் பாதிக்கப்பட்டதாலும், கோடைவெயிலால் விளைச்சல் இல்லாததாலும் விலை அதிகரித்து வருவதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

## தளியில் 100 மி.மீ. மழை பதிவு

கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் 100 மி.மீ. மழை பெய்தது பதிவாகியுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த இரு நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், பகல் நேரத்தில் வெப்பத்தின் அளவு குறைந்துள்ளது. இரவு நேரத்தில் குளிர்ந்த காற்று வீசுகிறது. இந்த நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒசூர், தளி, அஞ்செட்டி, சூளகிரி, காவேரிப்பட்டினம், கிருஷ்ணகிரி, வேப்பனஅள்ளி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் மழை பெய்தது.

இதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8 மணி வரை பெய்த மழை அளவு (மி.மீ): தளி - 100, அஞ்செட்டி - 24, தேன்கனிக்கோட்டை - 16, கிருஷ்ணகிரி - 8.4, ஒசூர் - 6, பாரூர் - 5.2, சூளகிரி - 5, போச்சம்பள்ளி - 3.6.

## திற்பரப்பு அருவியில் மிதமான தண்ணீர் வரத்து

குமரி மாவட்டத்தில் மலையோரப் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வரும் நிலையில் திற்பரப்பு அருவியில் தண்ணீர் வரத்து சற்று அதிகரித்துள்ளது. இதையடுத்து இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் குதூகலமடைந்துள்ளனர்.

குமரி மாவட்டத்தை கடந்த இரு மாதங்களாக வெயில் வாட்டி எடுக்கும் நிலையில், ஆறுகளில் தண்ணீர் வரத்து குறைந்தது. இதையடுத்து திற்பரப்பு அருவியும் வறண்டது. இந்நிலையில் தற்போது மாவட்டத்தில் மலையோரப் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வரும் நிலையில் ஆறுகளில் தண்ணீர் வரத்து சற்று அதிகரித்துள்ளது. இதையடுத்து திற்பரப்பு அருவியில் தண்ணீர் மிதமாகக் கொட்டத் தொடங்கியுள்ளது.

கோடைக்கு இதமான குளியல்: தற்போது தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் கத்திரி வெயில் வாட்டும் நிலையில் மக்கள் நீர் நிலைச் சார்ந்த சுற்றுலாத் தலங்களை நோக்கி படையெடுக்கின்றனர். இந்நிலையில் திற்பரப்பு அருவியில் மிதமாக தண்ணீர் கொட்டுவதால் சுற்றுலாப் பயணிகள் திற்பரப்பு அருவிக்கு வந்தவண்ணம் உள்ளனர்.

மேலும், மாவட்டத்தில் திங்கள்கிழமை அணைப்பகுதிகள் உள்பட அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக மிதமான மழை பெய்தது.

## தூத்துக்குடி மாவட்டத்தில் 1,500 ஏக்கர் உளுந்து பயிரில் மஞ்சள் நோய் தாக்குதல்: நடவடிக்கை எடுக்க ஆட்சியரிடம் வலியுறுத்தல்

தூத்துக்குடி மாவட்டத்தில் ஏறத்தாழ 1,500 ஏக்கரில் மஞ்சள் நோயால் பாதிக்கப்பட்டுள்ள உளுந்து பயிர்களை பாதுகாக்க போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியருக்கு காந்திய சேவா மன்ற நிறுவனர் வீ. ராஜேந்திர பூபதி அனுப்பியுள்ள மனு: தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் வடகாலில் உள்ள பேய்க்குளம், பெட்டைக்குளம், கோரம்பள்ளம் குளம் ஆகியவற்றின் பாசனத்தில் உள்ள கோரம்பள்ளம், அத்திமரப்பட்டி, குலையன்கரிசல், முள்ளக்காடு, முத்தையாபுரம், செபத்தையாபுரம் உள்ளிட்ட கிராமங்களில் ஏறத்தாழ 1,500 ஏக்கர் நிலப்பரப்பில் உளுந்து பயிரிடப்பட்டுள்ளது. அந்த பயிர்கள் இதற்கு முன்பு இல்லாத அளவுக்கு தற்போது மஞ்சள் நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளன.

ஏற்கெனவே, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நெற்பயிர் போதிய அறுவடை இல்லாத நிலையில், தற்போது பயிரிடப்பட்டுள்ள உளுந்து பயிரிலாவது லாபம் கிடைக்கும் என விவசாயிகள் நினைத்திருந்தனர். ஆனால், மஞ்சள் நோய் தாக்குதலால் உளுந்து அறுவடைக்கு வாய்ப்பே இல்லை என வேதனையடைந்துள்ளனர்.

மேலும், இரவு நேரங்களில் தொழிற்சாலைகள் வெளியேற்றும் அமில வாயுவால்தான் இதுபோன்ற நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். எனவே, கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ள உளுந்து பயிர்களை பாதுகாக்க போர்க்கால நடவடிக்கை எடுத்து மாவட்ட நிர்வாகம் நிரந்தர தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

## கர்நாடகத்தின் பீதர் மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல்:1.5 லட்சம் கோழிகள் அழிப்பு

கர்நாடகத்தின் பீதர் மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் பரவியுள்ளதால், 1.5 லட்சம் கோழிகள் அழிக்கப்பட்டன.

கர்நாடக மாநிலம், பீதர் மாவட்டம், ஹூம்னாபாத் வட்டம், மேலகெரே கிராமத்தில் உள்ள கோழிப் பண்ணையில் கடந்த 20 நாள்களில் 35 ஆயிரம் கோழிகள் இறந்தன. இதனால், சந்தேகமடைந்த கோழிப் பண்ணை உரிமையாளர், சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு தகவல் அளித்தார். அதன்பேரில், கோழிப் பண்ணையை ஆய்வுசெய்த சுகாதாரத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள், இறந்த கோழியை பெங்களூரில் உள்ள ஆய்வகத்துக்கு அனுப்பினர். இதை ஆய்வுசெய்த ஆய்வகம், கோழிகள் இறந்ததற்கு பறவைக் காய்ச்சல் (எச்1என்1) காரணமாக இருக்கலாம் எனத் தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து, கோழி மாதிரிகளை போபாலில் தேசிய உயர் பாதுகாப்பு பறவை நோய் மையத்துக்கு சோதனைக்காக கர்நாடக அரசு அனுப்பி வைத்தது. இதைச் சோதித்த அம் மையம், 35 ஆயிரம் கோழிகள் இறந்ததற்கு பறவைக் காய்ச்சலே காரணம் என உறுதி செய்துள்ளது. இதைத் தொடர்ந்து, கர்நாடகத்தில் பறவைக் காய்ச்சல் பரவியுள்ளதால், பொதுமக்கள் கோழிக் கறி மற்றும் முட்டைகளை உண்ணக் கூடாது என மாநில அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து மாநில கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் ஏ.மஞ்சு கூறுகையில், பீதர் மாவட்டத்தின் மேலெகெரே கிராமத்தில் பறவைக் காய்ச்சல் பரவியுள்ளது. எனவே, அப் பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கோழிகளை அழித்துள்ளோம் என்றார். இதைத் தொடர்ந்து, பறவைக் காய்ச்சல் பரவாமல் தடுக்கும் நோக்கத்தில் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் கூட்டாக பீதர் மாவட்டத்தில் திங்கள்கிழமை 1.5 லட்சம் கோழிகளை அழித்தனர். அதேபோல, 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முட்டைகளும் அழிக்கப்பட்டன.

இதுகுறித்து சுகாதாரத் துறை இயக்குநர் விமலா ஆர்.பாட்டீல் கூறுகையில், பீதர் மாவட்டத்தில் பறவைக் காய்ச்சலால் கோழிகள் இறந்துள்ள சம்பவம் எச்சரிக்கை மணியை அடித்துள்ளது. பறவைக் காய்ச்சல் நோயால் யாரும் பாதிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. எனினும், பறவைக் காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோழிக் கறி மற்றும் கோழி முட்டையை உண்ணக் கூடாது என்று மக்களை எச்சரிக்கிறோம். முட்டையை வேக வைக்காமலோ, பாதி வெந்ததாகவோ உண்ணக் கூடாது. பீதர் மாவட்டத்தில் பறவைக் காய்ச்சலால் யாராவது பாதிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை ஆய்வுசெய்ய 5 பேர் கொண்ட 10 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டால், அவர்களுக்கு சிகிச்சை அளிக்க பீதர் மற்றும் கல்புர்கி மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகள் தயார் நிலையில் உள்ளன. யாராவது பாதிக்கப்பட்டால் உடனடியாக 104 என்ற உதவி மையத்துக்குத் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

## "நிலத்தடி நீர்மட்டம் உயர மக்களிடம் விழிப்புணர்வு தேவை'

நிலத்தடி நீர்மட்டம் உயர மக்களிடம் விழிப்புணர்வு தேவை என பெங்களூரு மேயர் மஞ்சுநாத் ரெட்டி தெரிவித்தார்.

பெங்களூரு ஆனந்தராவ் சதுக்கத்தில் காந்தி சிலை அருகே இளைஞர் காங்கிரஸார் ஏற்பாடு செய்திருந்த மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை தொடக்கி வைத்து அவர் செய்தியாளர்களிடம் கூறியது: கோடை காலத்தையொட்டி பெங்களூரு மட்டுமின்றி மாநிலம் முழுவதும் குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பெங்களூரில் குடிநீருக்கு காவிரி நீரை மட்டுமின்றி, ஆழ்துளைக் கிணறுகளையும் மக்கள் நம்பி உள்ளனர். ஆனால், நிலத்தடி நீர்மட்டம் 800 அடிக்கும் கீழ் சென்றதால், எதிர்காலத்தில் குடிநீருக்கு பிரச்னை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆனந்தராவ் சதுக்கத்தில் மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை இளைஞர் காங்கிரஸ் சார்பில் செயல்படுத்தியுள்ளனர். இதுகுறித்து மாநகரில்

வசிக்கும் இளைஞர்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும், ஜெயநகர், மல்லேஸ்வரத்தில் மரங்கள் அதிகமாக உள்ளதால், அப்பகுதியில் வெப்பத்தின் தாக்கம் குறைவாக உள்ளது. ஆனால் மரங்கள் குறைந்துள்ள ஹெப்பாள் பகுதியில் வெப்பம் அதிகரித்து காணப்படுகிறது. எனவே, பெங்களூரில் பரவலாக அதிக அளவில் மரக்கன்றுகளை நட திட்டமிட்டுள்ளோம் என்றார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தண்ணீரை தெளியவைக்கும் தாவரம்

வெயில் காலத்தில் நீர் நிலைகளில் தண்ணீரின் இருப்பு குறையும் எனவே தண்ணீர் கலங்கிய நிலையில் இருக்கும்.தண்ணீரைத் தெளியவைக்க நம் முன்னோர்கள் தேற்றா மரத்தின் கொட்டையான தேற்றாங் கொட்டையைப் பயன்படுத்தினர். நீருள்ள பானையின் உட்புறத்தில் தேற்றாங்கொட்டையைதேய்ப்பதால் சில மணி நேரங்களில் பானைநீர் தெளிந்து விடும். நீரை தெளியவைப்பதால் இது தேற்றாங்கொட்டை எனப்பெயர் பெற்றது. தேற்றாங்கொட்டையை எடுத்த பின்உள்ள சக்கையை மீன்கள் உள்ள குட்டையில் விட்டால் மீன்கள் மயக்கநிலையை அடையும் பின்பு மீன் பிடிப்பது எளிதாக இருக்கும்.

### மாவட்டத்தில் பரவலான மழை: அரச்சலூரில் 26 மி.மீ., பதிவு

ஈரோடு: ஈரோடு மாவட்டம், அரச்சலூர் பகுதியில், அதிகபட்சமாக, 26 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. அக்னி நட்சத்திரத்தில் வெயில் வாட்டி வதைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. அதற்கு மாறாக மழை பெய்து, அக்னியை பொசுக்கி வருகிறது. இந்நிலையில் ஈரோடு மாவட்டத்தில், நேற்று முன்தினம் மாலை முதல், இரவு வரை பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக அரச்சலூரில், 26 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. பிற இடங்களில் பெய்த மழை அளவு (மி.மீ.,ல்): சத்தியமங்கலம் மற்றும்

மொடக்குறிச்சியில், 1, கொடிவேரி, கோபியில், 5, எலந்தகுட்டை மேடு, 11, கவுந்தப்பாடி 1.4, பெருந்துறை, பவானிசாகர், பவானி, புங்கம்பாடியில் தலா, 3, ஈரோடு, சிவகிரியில், 2, சென்னிமலையில், 10 மி.மீ., பதிவாகியுள்ளது. மழையால் வெப்பம் குறைந்து இதமான சூழல் நிலவியது.

**திருச்சியில் மழை**

திருச்சி: அக்னி நட்சத்திரம் துவங்கியதில் இருந்து, திருச்சி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்யத் துவங்கியுள்ளது. கடந்த, 6ம் தேதி முதல், அவ்வப்போது மழை பெய்கிறது. வாத்தலை அணைக்கட்டு பகுதியில் அதிகபட்சமாக, 2.7 செ.மீ., மழை பெய்தது. மாவட்டம் முழுவதும் மொத்தம், 16 செ.மீ., மழை பதிவாகி உள்ளது.

## தென்னை மரங்கள் சாய்வதால் விவசாயிகள்...கவலை சிவப்பு கூண் வண்டு தாக்குதலால் பாதிப்பு

தேவதானப்பட்டி: தேவதானப்பட்டி பகுதியில் சிவப்பு கூண் வண்டு தாக்குதலால் தென்னை மரங்கள் வேரோடு கீழே சாய்ந்து வருகின்றன. பலன் தரும் நிலையில் மரங்கள் பாதிக்கப்படுவதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

பெரியகுளம் தாலுகாவில் தேவதானப்பட்டி, கெங்குவார்பட்டி, ஜி.கல்லுப்பட்டி, குள்ளப்புரம், நாகம்பட்டி, நல்லகருப்பன்பட்டி, அழகர்நாயக்கன்பட்டி, கீழவடகரை, தென்கரை, லட்சுமிபுரம் உட்பட பல கிராமங்களில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. இது லாபகரமான தொழில் என்பதால் தற்போதும் தென்னங்கன்று நடவு செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். சில மாதங்களாக தேங்காய் விலையில் ஏற்றம், இறக்கமாக உள்ளது. இந்நிலையில் தேவதானப்பட்டி பகுதியில் தென்னையில் சிவப்பு கூண் வண்டு தாக்குதல் அதிகரித்துள்ளது.

தென்னை மர வேரில் வண்டுகள் தாக்குவதால் மரங்கள் வேரோடு சாய்ந்து காய்ந்து விடுகிறது. பலன் தரும் நிலையில் மரங்கள் காய்ந்து வருவதால் விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் செய்வதறியாது திகைக்கின்றனர்.

வேளாண் அதிகாரிகள் கூறுகையில், “சிவப்பு கூண் வண்டு தாக்குதலில் இருந்து தென்னை மரங்களை பாதுகாக்க மோனோகோட்டோபாஸ் 10 மில்லி, 10 மில்லி தண்ணீரை கலந்து இளம் வேரில் கட்டி விடவேண்டும். அதற்கு முன்பாக மரத்தில் உள்ள காய்களை பறிக்க வேண்டும். மருந்து கட்டிய பிறகு 45 நாட்களுக்கு காய்களை பறிக்க கூடாது. இனக்கவர்ச்சிப் பொறி வைக்க வேண்டும். வயல்வெளிகளை சுத்தமாக வைக்க வேண்டும். கன்றுகளை நெருக்கமாக நடவு செய்யக்கூடாது, என்றார்.

## பயிரை சேதப்படுத்தும் மயில்கள்: இழப்பீடு கேட்கும் விவசாயிகள்

பெ.நா.பாளையம்: பெ.நா.பாளையம் அருகே படையாச்சியூர், ஏத்தாப்பூர், கொமராபாளையம், கொட்டவாடி, பேளூர் கரடிப்பட்டி, கல்லேரிப்பட்டி கிராமங்களில் நெல், மக்காச்சோளம், சிறுதானியங்கள் என சாகுபடி செய்துள்ளனர். கோடை காலம் என்பதால், வனப்பகுதியில் இருந்து வெளிவரும் மயில்கள் பசுமையான விவசாய நிலங்களில் உலா வரத்துவங்கிவிட்டன. அங்குள்ள பயிர்களை சேதப்படுத்தி வருகிறது. இதுகுறித்து வனக்குழு தலைவர் அழகரசன் கூறியதாவது: படையாச்சியூர் உள்ளிட்ட கிராமங்களில், நூற்றுக்கும் மேற்பட்ட மயில்கள் சுற்றித்திரிகின்றன. குறிப்பாக கல்யாணகிரி தேன்மலை வனப்பகுதி அருகில் விவசாய நிலங்களில் பயிர்களை சேதப்படுத்தி வருகிறது. பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு வனத்துறையினர் இழப்பீடு வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## தர்மபுரியில் 25 மி.மீ., மழை

தர்மபுரி: தர்மபுரியில் நேற்று முன்தினம் அதிகபட்சமாக, 25 மில்லி மீட்டர் மழை பதிவானது. தர்மபுரி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலும், ஒகேனக்கல் பகுதியிலும் நேற்று முன்தினம் மாலை மழை பெய்தது. இதில், அதிகபட்சமாக தர்மபுரியில், 25 மில்லி மீட்டர், கலெக்டர்

அலுவலகத்தில், 13 மி.மீ., ஒகேனக்கல்லில், 10.60 மி.மீ., மழை பதிவானது. நேற்று முன்தினம் பெய்த மழை காரணமாக, நேற்று தர்மபுரியில் வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. நேற்று வெயில் அளவு, 97.7 டிகிரி பாரன்ஹீட்டாக பதிவானது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இடி, மின்னலுடன் கனமழை அதிகபட்சமாக தளியில் 100 மி.மீ பதிவு

கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இடி, மின்னலுடன் கனமழை பெய்தது. அதிகபட்சமாக தளியில் 100 மில்லி மீட்டர் மழை பதிவானது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோடை காலம் துவங்கும் முன்பே, கடும் வெயில் வாட்டி வதைத்து வந்தது. பகல் நேரத்தில் அதிகபட்சமாக 104 டிகிரி வரை வெயில் கொளுத்தியதுடன், இரவு நேரங்களில் அனல் காற்று வீசியது. இதனால், மக்கள் அவதிக்குள்ளாகினர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை கிருஷ்ணகிரி, ஓசூர், சூளகிரி, தேன்கனிக்கோட்டை, போச்சம்பள்ளி, அஞ்செட்டி, தளி, வேப்பனஹள்ளி உள்ளிட்ட மாவட்டத்தின் பல பகுதிகளில் பரவலாக மழை பெய்தததது. மழையின் போது பலத்த காற்று வீசியதால், நகரின் பல இடங்களில் மின்சாரம் தடைபட்டது. வேப்பனஹள்ளியில் இடி, மின்னலுடன் மழை பெய்ததால், சாலையில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

தேன்கனிக்கோட்டை பகுதியில் 3 நாட்களாக மழை பெய்து வருகிறது. நேற்று மாலை சாரல் மழை பெய்தது. கத்திரி வெயில் துவங்கியது முதலே, வெயிலுக்கு பதிலாக மழை பெய்து வருவதால், கிருஷ்ணகிரி

மாவட்டத்தில் குளிர்காற்று வீசுவதால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

மாவட்டத்தில் மழை அளவு விபரம்: தளி - 100 மி.மீ, அஞ்செட்டி - 24 மி.மீ, தேன்கனிக்கோட்டை - 16 மி.மீ, கிருஷ்ணகிரி - 8.4 மி.மீ, ஓசூர் - 6 மி.மீ, பாரூர் - 5.2 மி.மீ, சூளகிரி - 5 மி.மீ, போச்சம்பள்ளி - 3.6 மி.மீ மழை என ஒட்டுமொத்தமாக, 168 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

## கோபி கூட்டுறவு சங்கத்தில் ரூ.7 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்

கோபி, : கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடைபெற்ற ஏல விற்பனைக்கு கோபி மற்றும் சுற்றுப்புறப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் 6,500 வாழைத்தார்களை கொண்டு வந்திருந்தனர். இதில் கதலி(கிலோ) ரூ.27.50க்கும், நேந்திரம் (கிலோ) ரூ.32, செவ்வாழை(தார்) ரூ.425, ரஸ்தாலி ரூ.300, ரொபஸ்டா ரூ.200, தேன்வாழை ரூ.250, மொந்தன் ரூ.250, பச்சைநாடன் ரூ.230 என மொத்தம் ரூ.7 லட்சத்திற்கு வாழைத்தார் விற்பனையானது. 7 ஆயிரம் தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் சிறிய தேங்காய் ஒன்று 5 ரூபாய்க்கும், பெரிய தேங்காய் 9 ரூபாய்க்கும் என ரூ.60 ஆயிரத்திற்கு விற்பனையானது.

## மஞ்சூர் சுற்று பகுதிகளில் பலத்த மழை

மஞ்சூர்,: மஞ்சூர் சுற்றுப்புற பகுதிகளில் விடிய, விடிய பெய்த பலத்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். நீலகிரி மாவட்டம் முழுவதும் வறட்சி நிலவிய நிலையில் தற்போது மாவட்ட பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. மஞ்சூர் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று முன் தினம் காலை முதலே வானம் மேக மூட்டத்துடன் பலத்த மழை பெய்ய துவங்கியது. நீண்ட இடைவெளிக்கு பின் மஞ்சூர் சுற்றுப்புற பகுதிகளில் பெய்த பலத்த மழையால் தேயிலை மற்றும் மலைக்காய்கறி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## இலவச வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி துவக்கம்

நாகை : நாகை கால்நடை மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழகத்தின், கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நாளை (11ம்தேதி)யும், நாளை மறுநாள் 12ம் தேதியும் காலை 10 மணி அளவில் வெள்ளாடு வளர்ப்பு குறித்த 2 நாள் இலவச பயிற்சி நடைபெற உள்ளது. இப்பயிற்சியின் வெள்ளாடுகளின் இனங்கள், கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை, இனப்பெருக்க மேலாண்மை மற்றும் நோய் பராமரிப்பு உள்ளிட்டவற்றில் பயிற்சி அளிக்கப்படும்.

இப்பயிற்சியில்கலந்து கொள்ள விரும்புவோர் நேரிலோ அல்லது 04365 247123 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டோ தங்கள் வருகையை பதிவு செய்து கொள்ளும்படி கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் முனைவர் சீனிவாசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## வயல்களில் எலியை ஒழிக்க எளிய வழி வேளாண்துறை ஆலோசனை

இளையான்குடி, : வயல்களில் எலிகளின் அட்டகாசத்தை ஒழிப்பது எப்படி என்பது குறித்து வேளாண்மை துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.விவசாய நிலங்களில் விளைவிக்கப்படும் பயிர் வகைகளை உண்ண வரும் எலிகளால் விவசாயிகள் கடும் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். இதனை தவிர்க்கும் முறை குறித்து வேளாண்மை அதிகாரிகள் கூறியுள்ளதாவது: வயல்களில் பயிர் செய்ய ஆரம்பிக்கும் முன்பும், பயிரில்லாத காலத்திலும் கூடுமானவரை எல்லா எலி வளைகளையும் தோண்டி அழிக்க வேண்டும். வரப்புகளின் ஓரங்களில் களை எடுத்து மண் அடைத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் எலிகள் வளைகளை அமைக்க இயலாது. உழும்போது ஆழமாக உழுவதன் மூலம் எலி வளைகளை உடைக்கலாம். குறுகிய வரப்புகள் அமைக்க வேண்டும். புதர்களை அழிக்க வேண்டும்.

வைக்கோல் போர்களை வயலுக்கு அருகில் அமைக்க கூடாது. ஆந்தைகள் போன்ற இரவு பறவைகள் அமர 'டி' வடிவ குச்சிகளை நட

வேண்டும். அதன் மூலம் எலிகளை இயற்கை முறையில் அழிக்கலாம். வெளிச்சமான விளக்கின் மூலம் ஓடாமல் நிற்கும் எலிகளை தடியால் அடித்து கொல்ல வேண்டும். எலிகளின் இயற்கை எதிரிகளான ஆந்தை மற்றும் பாம்பு போன்றவற்றை அழிக்காமல் இருக்க வேண்டும். மூங்கில் கிட்டிகளை 1 ஏக்கருக்கு 20 கிட்டிகள் வீதம் வைத்து எலிகளை பிடித்து அழிக்கலாம்.

வாயகன்ற பானைகளில் சாணம் கலந்த நீரை நிரப்பி மேற்பரப்பில் சோறு போட்டு வைத்தால் அவற்றை உண்ண வரும் எலிகள் அந்த சாண நீரில் மூழ்கி இறந்து விடும். எ.எல்.பி போன்ற விஷ மாத்திரைகளை வளைக்கு 1 வீதம் போட்டு ஈரமண் போட்டு மூட வேண்டும். துத்தநாக பாஸ்பைடு விஷ உணவு தயாரித்து வைத்து எலிகளை அழிக்கலாம். ஆண்ட்டிகொயாகுலண்ட் கலவை தயாரித்து வைத்து எலிகளை அழிக்கலாம். ப்ரோமோடையலான் மருந்து கொண்ட முஷ்-முஷ் என்ற உணவு கட்டியை ஏக்கருக்கு 20 என்ற எண்ணிக்கையில் வைத்து எலிகளை அழிக்கலாம் என்று கூறி உள்ளனர்.